செய்தி வெளியீடு எண்: 136 நாள்: 22.02.2018

# செய்தி வெளியீடு

தமிழக அரசால் ஒவ்வொரு ஆண்டும் தொழிற்பயிற்சி தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் பள்ளிக்கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோர் நலன் கருதி தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் தொழிற்பழகுநராக **(Apprentices)** அமர்த்துவதற்கு ஏதுவாக தொழிற்பழகுநர்களுக்கான ஆட்சேர்ப்பு முகாம் நடத்தப்படுவதைப் போல் இந்த ஆண்டும் இத்துறையின் கீழ் உள்ள ஐந்து மண்டலங்களிலும் தொழிற்பழகுநர்கள் **(Apprentices)** ஆட்சேர்ப்பு முகாம் பின்வரும் நாட்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அ. | மதுரை மண்டலம் | **27.02.18** | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மதுரை |
| ஆ. | சென்னை மண்டலம் | **10.03.18** | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்புத்தூர் |
| இ. | திருச்சி மண்டலம் | **08.03.18** | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கடலூர் |
| ஈ. | கோவை மண்டலம் | **09.03.18** | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,கோயம்புத்தூர் |
| உ. | திருநெல்வேலி மண்டலம் | **17.03.18** | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், பேட்டை. |

நிறுவனங்களில் / தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநராக **(Apprentices)** பணியமர்த்தப்படும் நேர்வுகளில் பிரதி மாத உதவித்தொகை ரூ.6000/– முதல் ரூ.9000/– வரை தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (**National Apprentices Certificate)** பெறுவதற்கான தேர்வுகளை எழுதிடலாம். மேற்காணும் நாட்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறவுள்ள முகாம்களில் 50–க்கும் மேற்பட்ட முன்னனி பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பங்கு கொள்ளவுள்ளன. எனவே, அரசின் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி எட்டாம் வகுப்பு தேர்ச்சி / பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தொழிற்கல்வி பயின்று இதுவரை தொழிற்பழகுநராக பணியமர்த்தப்படாதவர்கள் மேற்கண்ட நாட்களில் நடைபெறவுள்ள முகாம்களில் பங்குகொண்டு இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9